**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**DEPOSITION OF WITNESS**

**P.W.1**

**MCOP No.105/2023**

| | |
|---|---|
| **Name** | **: அன்பரசன்** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 05.03.2026.**

**ம.சா.1 முதல் விசாரணை:-**

1) எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இம்மனுவின் மனுதாரர். 16.12.2022 தேதிய முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட ஒளிநகல் ம.சா.ஆ.1. 21.12.2022 தேதிய TN 32 AC 3082 வாகனத்தின் எம்விஐ அறிக்கை ஒளிநகல் ம.சா.ஆ.2. 04.04.2013 தேதிய TN 32 AC 3082 காரின் பதிவு சான்றிதழ் ஒளிநகல் ம.சா.ஆ.3. 17.09.2022 தேதிய இன்சூரன்ஸ் பாலிசி ஒளிநகல் ம.சா.ஆ.4. 05.03.2001 தேதிய Hero Splendor Pro வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஒளிநகல் ம.சா.ஆ.5. மனுதாரரின் ஆதார் அட்டை ஒளிநகல் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது ம.சா.ஆ.6. 19.12.2022 தேதிய டிஸ்சார்ஜ் சம்மரி அசல் ம.சா.ஆ.7. 05.12.2023 தேதிய காய சான்றிதழ் அசல் ம.சா.ஆ.8. மருத்துவ பில்கள் ரூ.1,28,333 அசல் ம.சா.ஆ.9. வங்கி கணக்கு புத்தகம் ஒளிநகல்

அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது. ம.சா.ஆ.10. எக்ஸ் ரே (4 எண்ணிக்கை) அசல் ம.சா.ஆ.11. ஸ்கேன் (4 எண்ணிக்கை) அசல் ம.சா.ஆ.12. 03.06.2022 தேதிய மனுதாரரின் சம்பள சான்றிதர் (எண்ணிக்கை 3) இணையவெளி நகல் ம.சா.ஆ.13. 19.06.2017 தேதிய டிப்ளமோ சான்றிதழ் ஒளிநகல் ம.சா.ஆ.14. ஆக குறியீடு செய்யப்படுகின்றன. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். ம.சா.ஆ.9 ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபணை தீர்ப்பின்போது விவாதிக்கப்படும்.

**2 ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை:-**

2) விபத்து நடந்தத புனல்வாசங்ல ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். நான் பால் ஊற்ற சென்ற பால் சொசைட்டி சாலையின் மேற்கு புறத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீடு ரோட்டின் கிழக்கு புறத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் பால் ஊற்றிவிட்டு சொசைட்டியில் இருந்து வீட்டிற்கு செல்வதற்காக சென்றேன் என்றால் இல்லை. பாலை ஊற்றிவிட்டு சிறுநீர் கழித்துவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக நின்றிருந்தேன். நான் வீட்டிற்கு செல்வதற்காக சாலையில் வரும் போக்குவரத்தை கவனிக்காமல் திடீரென்று சாலையை மேற்கில் இருந்து கிழக்காக கடந்துவிட்டேன் என்றால் சரியல்ல.

3) என்னுடைய கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் இந்த விபத்து ஏற்பட்டதால் தான் இந்த விபத்து சம்மந்தப்பட்ட மாதிரி வரைபடம் மற்றும் குற்ற பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் இந்த விபத்து ஏற்பட்டதால் தான் இந்த மனுவில் நஷ்ட ஈட்டுக்காக வேண்டி 3 நாள் கழித்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்களை நிருபிப்பதற்காக விபத்து பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விபத்து ஏற்பட்ட உடன் சுந்தரம் மருத்துதவமனைக்கு சென்று தான் சிகிச்சை எடுத்து கொண்டேன். அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை.

4) இந்த விபத்தினால் 19.02.2022-ல் கங்கா மருத்துவமனைக்கு பின்னிட்டு தொடர் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நாட்டு வைத்தியம் எடுத்து கொண்டேன். நாட்டு வைத்தியம் பின்னிட்டு எடுத்து கொண்டேன் என்ற விவரத்தை நான் எனது நிருபண வாக்குமூலத்தில் தற்போது வரை சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய மனுவில் எனது வருமானத்தை ரூ.10000 என்று தான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தற்போது எனது நிருபண வாக்குமூலத்தில் எனது வருமானம் ரூ.19000 என்று நான் மனுவிற்காக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.19000 சம்பளம் வாங்கியதை நிருபிக்க சம்பபளம் பட்டுவாடா செய்யப்பட்ட என் வங்கி கணக்கு பட்டியலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) தற்போதும் இதே நிறுவனத்தில் தான் வேலை செய்து வருகிறேன் என்றால் இல்லை. தற்போது நான் எந்த வேலைக்கும் செல்வதில்லை. என் அப்பாவுடன் இருந்து வருகிறேன். நான் வேலையை விட்டு வந்ததற்கான எந்தவித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த மனுவில் ஒப்படைத்துள்ள ஆவணங்கள் அனைத்தும் அதிக நஷ்ட ஈடு கோருவதற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது நிருபண வாக்குமூலத்தில் சிவசக்தி ஜெனினியா இன்ஜினியரிங் என்ற கம்பெனியில் வேலை பார்த்து வந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) நான் இந்த மனுவில் அதிக நஷ்ட ஈடு கோருவதற்காக சிவசக்தி ஜெனினியா இன்ஜினியரிங் என்ற கம்பெனியில் வேலை பார்த்து வந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தின் மூலம் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சரியாகி விட்டதால் தான் நான் தனியாக எவ்வித தொடர் சிகிச்சையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அதற்குண்டான ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்து என்னுடைய கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் ஏற்பட்டதமால் தான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் இந்த

விபத்திற்கு எவ்வித நஷ்டஈடும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனவே 2ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.03.05 17:22:43 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**